

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் முதுபெரும் தலைவர் அய்யா இரா.நல்லகண்ணு அவர்களின் நூறாவது ஆண்டு பிறந்தநாளையொட்டி அவரது இல்லத்தில் கழக துணைப் பொதுச் செயலாளரும் நாடாளுமன்ற கழகக் குழுத் தலைவருமான கனிமொழி கருணாநிதி சந்தித்து வாழ்த்து தெரிவித்தார்.

# கடலூர் கிழக்கு மாவட்ட வழக்கறிஞர் அணி ஆலோசனைக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் - அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் அறிவிப்பு!



கடலூர், டிச. 28-

கடலூர் கிழக்கு மாவட்ட தி.மு.க வழக்கறிஞரணி நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் நடைபெற உள்ளது என வேளாண்மை -உழவர் நலத்துறை அமைச்சர், கழக உயர்நிலை செயல் திட்ட குழு உறுப்பினர், கடலூர் கிழக்கு மாவட்ட தி.மு.க. செயலாளர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் அறிவித்துள்ளார்.

இது குறித்து அவரது அறிக்கை வருமாறு: -

முதலமைச்சர், கழக தலைவர் அவர்களின் வழி காட்டுதல்படியும், துணை முதலமைச்சர், கழக இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் அறிவுறுத்தலின்படியும், கழக சட்டத்துறை செயலாளர் நாடாளுமன்ற உறுப்பினர் என்.ஆர்.இளங்கோ அவர்களின் அறிவிப்பின் படி, வருகின்ற 30.12.2024, திங்கட்கிழமை, காலை 10.00 மணி அளவில், கடலூர் ஹோட்டல் ஆற்காடு உட்லண்ட்ஸ் ஹோட்டல் அரங்கத்தில், கடலூர் கிழக்கு மாவட்ட தி.மு.க. வழக்கறிஞரணி நிர்வாகிகள் கூட்டம் நடைபெற உள்ளது. இக்கூட்டத்தில் கழக சட்டத்துறை இணைச் செயலாளர் மத்திய மண்டல பொறுப்பாளர் சூர்யா வெற்றிகொண்டான் அவர்களும், தலைமை கழக வழக்கறிஞர் மூ.தினேஷ்குமார் அவர்களும் கலந்து கொண்டு ஆலோசனை வழங்க உள்ளனர். ஆகவே கூட்டத்தில் மாவட்ட கழக நிர்வாகிகள் முன்னாள், இந்நாள் சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள் மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் கழகச் செயலாளர்கள், மாவட்ட மாநகர தி.மு.க. வழக்கறிஞர் அணி நிர்வாகிகள் நீதிமன்ற வழக்கறிஞர் நிர்வாகிகள் கழக வழக்கறிஞர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

பொருள்: கழக சட்டத்துறையின் சார்பாக வருகின்ற 18.1.2025 அன்று நடைபெறும் வழக்கறிஞர்கள் அணி 3வது மாநாடு சம்பந்தமாக, கழக பணிகள்.

இவ்வாறு எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் தெரிவித்துள்ளார்.

## கே.கே.செல்லப் பாண்டியன் தலைமை! கே.எஸ்.சந்திரன் முன்னிலை!

# புதுக்கோட்டை வடக்கு மாவட்ட மாணவர் அணி சார்பில் மாபெரும் கைப்பந்து போட்டி!

## அமைச்சர்கள் எஸ்.ரகுபதி - சிவ.வீ.மெய்யநாதன் பரிசு வழங்குகிறார்கள்! பெரியண்ணன் அரசு - கவிச்சுடர் கவிதைப்பித்தன் - எம்.எம்.அப்துல்லா-டாக்டர் வை.முத்துராஜா- டாக்டர் அஞ்சுகம் பூபதி - த.சந்திரசேகர் பங்கேற்பு!

புதுக்கோட்டை, டிச. 28-

கழக இளைஞரணி செயலாளர், துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் 48 வது பிறந்தநாளை முன்னிட்டு புதுக்கோட்டை வடக்கு மாவட்ட மாணவர் அணி திமுக சார்பில் நடத்தப்படும் மாநில அளவிலான ஆண்களுக்கான மாபெரும் கைப்பந்து போட்டி இன்று (28.12.2024-சனிக்கிழமை) காலை 10.00 மணியளவில் வயலோகத்தில் புதுக்கோட்டை வடக்கு மாவட்ட செயலாளர் கே.கே.செல்லபாண்டியன் தலைமையில் நடைபெறுகிறது.

மாநில மருத்துவர் அணி துணைச் செயலாளர், விராலிமலை தொகுதி பார்வையாளர் டாக்டர் அஞ்சுகம் பூபதி, அன்னவாசல் தெற்கு ஒன்றிய தி.மு.க. செயலாளர் கே.எஸ்.சந்திரன், பெ.தெய்வானை, சபா (எ) ரத்தின சபாபதி, கோ.அண்ணா துரை செ.பிரசன்னா ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர். புதுக்கோட்டை தெற்கு மாவட்ட செயலாளர் சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி, பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் ஆகியோர் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகளை வழங்குகின்றனர். மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் கே.எஸ்.ச.இளையசூரியன் வரவேற்புரையாற்றுகிறார். வெற்றி பெறும் வீரர்களுக்கு முதல் பரிசு ரூ.40048 ஐ புதுக்கோட்டை வடக்கு மாவட்டச் செயலாளர் கே.கே.செல்லப்பாண்டியன்,

இரண்டாம் பரிசு ரூ.30048 ஐ கழக விவசாய அணி துணைச் செயலாளர் கே.ஆர்.என்.போஸ், மூன்றாம் பரிசு ரூ.20048 ஐ பொதுக்குழு உறுப்பினர் தென்னலூர் எம்.பழனியப்பன், நான்காம் பரிசு ரூ.10048 ஐ அகரப்பட்டி எஸ்.லெட்சுமணன் ஆகியோர் வழங்குகின்றனர்.

அனைத்து பரிசுகளுக்கான கோப்பையை எஸ்.எஸ்.பி கிரஷர் அண்ட் ரெடி மிக்ஸ் உரிமையாளர் எஸ்.எஸ்.பி.ராஜா வழங்குகிறார்.

இந்நிகழ்வுகளில் எம்.எம்.அப்துல்லா எம்.பி, டாக்டர் வை.முத்துராஜா எம்.எல்.ஏ., பெரியண்ணன் அரசு, கவிச்சுடர் கவிதைபித்தன், த.சந்திரசேகர், அஞ்சுகா மீனாட்சி சுந்தரம், வி.என்.மணி, பி.டி.அரசகுமார், செ.அசோக் பாண்டியன், கே.ஆர்.என்.போஸ், அரு.வீரமணி, எம்.லியாகத் அலி, எஸ்.எஸ்.கருப்பையா க.மதியழகன் பெ.ராஜேஸ்வரி, சுப.சரவணன் கீரை.தமிழ்ராஜா சு.சண்முகம், என்.சேட், மு.பி.ம.சத்தியசீலன், ஆர்.ஆர்.எஸ்.மாரிமுத்து அ.இளங்குமரன், கே.பி.அய்யப்பன், சி.சண்முகம் வெ.முத்துக்கிருஷ்ணன், தவ.பாஞ்சாலன், மு.க.ராமகிருஷ்ணன், எம்.பரமசிவம், மா.தமிழ் அய்யா, ஆர்.ஆர்.சாமிநாதன்,

ஓ.எஸ்.வெங்கடாசலம், வை.விஜயகுமார், பி.அண்ணாதுரை, உ.முருகேசன், எம்.செந்தில்குமார், எம்.எம்.பாலு, என்.சாத்தையா, இராசு.சந்தோஷ், ஆர்.செல்லத்துரை, சி.ஆர்.வி.சித்ரா, டாக்டர் மு.க.முத்துக்கருப்பன், டாக்டர் செ.குறிஞ்சிவாணன், சி.அரங்கநாயகம், கா.இளவரசன், ஆர். உஷாராணி, அ.பிரபா, ஏ.சுந்தர்ராஜ், இ.பி.சண்முகம், மு.கலைஞர் கருணாநிதி, மு.இளஞ்சேரன் முத்துச்சாமி, கை.பழனிச்சாமி, கே.அன்சாரி பாஷித், விளாப்பட்டி சிவா, எஸ்.வி.ஆர்.ஸ்டாலின் ராஜா, பொன்.பாரி, வழக்கறிஞர் எம்.பாலமுருகன், எம்.வி.முத்தையா, எஸ்.நிஜாமுதீன், சி.மணி ஆர்.ஜே.அண்ணாதுரை, கே.சிவசுப்பிரமணியன், கே.டி.ஆர்.தங்கராஜ், சாங்கிராப்பட்டி ஆர்.ரவி, எஸ்.தமிழினியன், சி.சின்னத்துரை, எஸ்.ராஜேந்திரன், இரா.முத்துச்செல்வம், சித.சண்முகம், எம்.கோவிந்தராஜ், வி.சி. பரஞ்ஜோதி,

ஆர்.கோபாலன், எஸ்.முருகையன், எம்.முத்துச்சாமி பழ.பாண்டியன், முத்துலெட்சுமி, ராஜேந்திரன், பி.கார்த்திக், திருப்பதி, பி.ராஜேஸ், எம்.ஆர்.சி.சிதம்பரம், சி.சண்முகம், டி.கணேசன், கே. கார்த்தி, பி.கிட்டு மற்றும் மாவட்ட, ஒன்றிய, நகர, கிளை கழக நிர்வாகிகள் ஏராளமானோர் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர். முடிவில் அன்னவாசல் பேரூர் கழக செயலாளர் முகமது ரிஷா, மாவட்ட மாணவர் அணி துணை அமைப்பாளர் சிப்காட் பி.சதீஷ்குமார் ஆகியோர் நன்றி கூறுகின்றனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

**கோவை ப. கோபால்**
**டிசம்பர் 28 (1972)**



கோவை நகரக் கழகச் செயலாளராகவும் – கோவை மேற்கு தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு, சட்டமன்ற உறுப்பினராகவும் பணியாற்றியவர்.

கழகம் நடத்திய அனைத்து அறப்போராட்டங்களிலும் கலந்து கொண்டு பலமுறை சிறை சென்றவர்.

“அண்ணா வழியில் அயராது உழைத்து கழகத்தின் கொள்கைகளை உள்ளத்தில் பதியவைத்து, எந்தச் சூழ்நிலையிலும் கட்டுப்பாட்டை மீறாமல் பணியாற்றிய அன்புத் தங்கம்” என தலைவர் கலைஞர் அவர்களால் பாராட்டப்பட்டவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**



# தி.மு.க. இளைஞர் அணி

கலைஞர் 100 1924 - 2023

## சட்டமன்றத் தொகுதி வாரியாக பாக இளைஞர்களுக்கு சமூக வலைத்தளப் பயிற்சி

## இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அறிவிப்பு

கழகத் தலைவர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களது அறிவுறுத்தலின் பேரில், பாகத்திற்கு ஓர் இளைஞரைத் தேர்வு செய்து, சட்டமன்றத் தொகுதி வாரியாக சமூக வலைத்தளப் பயிற்சி வழங்கி வருகிறோம். மண்டலம் 8 – இல் இரண்டு சட்டமன்றத் தொகுதிகளுக்கு வரும் 28.12.2024 அன்று சமூக வலைத்தளப் பயிற்சி நடைபெற இருக்கிறது. அதன் விவரம் வருமாறு :

| நாள் | நேரம் | மண்டலம் | சட்டமன்றத் தொகுதி | இடம் |
|---|---|---|---|---|
| 28.12.2024 சனிக்கிழமை | காலை 9.00 மணி | 8 | இராமநாதபுரம் | கிங் பேலஸ், பழைய செக் போஸ்ட், ராமேஸ்வரம் பிரதான சாலை, பட்டினம்காத்தான், இராமநாதபுரம். |
| | மாலை 4.00 மணி | | திருவாடானை | குட்லு மஹால், டி.டி.பிரதான சாலை, ஆர்.எஸ்.மங்கலம், திருவாடானை. |

அந்தந்த சட்டமன்றத் தொகுதி பாகங்களில், இப்பயிற்சிக்காகத் தேர்வு செய்யப்பட்டுள்ள இளைஞர்கள் தவறாமல், இதில் பங்கேற்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

“அன்பகம்”
தேனாம்பேட்டை
சென்னை–18
நாள் : 26-12-2024

**உதயநிதி ஸ்டாலின்**
செயலாளர்,
தி.மு.க. இளைஞர் அணி

# கடலூர் மேற்கு மாவட்ட வழக்கறிஞர் அணி ஆலோசனைக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர்- அமைச்சர் சி.வி.கணேசன் அறிக்கை!



கடலூர், டிச. 28 -

கடலூர் மேற்கு மாவட்டச் செயலாளர் - அமைச்சர் சி.வி.கணேசன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு: -

கழக தலைவர், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வழி காட்டுதல்படியும், துணை முதலமைச்சர், கழக இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் அறிவுறுத்தலின் படியும், கழக சட்டத்துறை செயலாளர் நாடாளுமன்ற உறுப்பினர் என். ஆர். இளங்கோ அறிவிப்பின்படி, நாளை (29.12.2024) ஞாயிற்றுக் கிழமை மாலை 3.00 மணியளவில், நெய்வேலி தொ.மு.ச. அலுவலகத்தில் கடலூர் மேற்கு மாவட்ட தி.மு.க வழக்கறிஞரணி நிர்வாகிகள் கூட்டம் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்தில் கழக சட்டத்துறை இணைச் செயலாளர் மத்திய மண்டலப் பொறுப்பாளர் சூர்யா வெற்றிகொண்டான்ம், தலைமை கழக வழக்கறிஞர் மூ.தினேஷ் குமார் ஆகியோர் கலந்து கொண்டு ஆலோசனை வழங்க உள்ளனர்.

ஆகவே கூட்டத்தில் மாவட்டக் கழக நிர்வாகிகள் முன்னாள், இந்நாள் சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள், ஒன்றிய கழக, நகர கழக, பேரூர் கழக, செயலாளர்கள் மாவட்ட வழக்கறிஞர் அணி நிர்வாகிகள் நீதி மன்ற வழக்கறிஞர்கள் அனைவரும் தவறாமல் கலந்துகொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

**பொருள்: -**

1.கழக சட்டத்துறையின் சார்பாக வருகின்ற 18.1.2025 அன்று நடைபெறும் வழக்கறிஞர்கள் அணி 3 வது மாநாடு சம்பந்தமாக,

2. கழக ஆக்க பணிகள்.

இவ்வாறு மாவட்ட செயலாளர் அமைச்சர் சிவி கணேசன் தமது அறிக்கையில் கேட்டுக் கொண்டுள்ளார்.

## நெல்லை மாவட்ட தி.மு.க. பொது உறுப்பினர்கள் கூட்டம் நடைபெறுவதையொட்டி -

# பகுதிச் செயலாளர்கள் - மாநகரக் கழக அணிகளின் கூட்டம்!

## மாநகரச் செயலாளர் சு.சுப்பிரமணியன் பங்கேற்பு!

நெல்லை, டிச. 28 -

முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்களின் வழி காட்டுதலின்படி கழக முதன்மைச் செயலாளர் நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சரும் நெல்லை மாவட்டப் பொறுப்பு அமைச்சருமான கே.என். நேரு அறிவிப்பின்படி இன்று (28.12.2024 - சனிக் கிழமை) காலை 10 மணிக்கு நெல்லை மாநகராட்சி எதிரே உள்ள வர்த்தக மையத்தில் நெல்லை மாவட்ட தி.மு.க.பொது உறுப்பினர்கள் கூட்டம் நடைபெறுகிறது.

இது தொடர்பாக நெல்லை மாநகர தி.மு.க. சார்பில் மாநகர அலுவலகத்தில் இந்த கூட்டத்தில் கலந்து கொள்வதற்கான பகுதி செயலாளர்கள் மற்றும் மாநகர தி.மு.க.சார்பு அணிகளின் ஆலோசனை கூட்டம் நெல்லை பேட்டை பகுதி செயலாளர் நமச்சிவாயம் என்ற கோபி தலைமையில் மாநகர துணை செயலாளர்கள் அப்துல் கையூம்,

தச்சநல்லூர் பகுதி செயலாளர் பூ.சுப்பிரமணியன், பாளையங் கோட்டை பகுதி செயலாளர் அன்டன் செல்லத்துரை ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் மாநகர செயலாளர் சு.சுப்பிர மணியன் பங்கேற்று பொது உறுப்பினர்கள் கூட்டத்தில் கலந்து கொள்வது குறித்து ஆலோசனைகள் வழங்கி உரையாற்றினார்.

நிகழ்வில் மாநகர சார்பு அணிகளின் நிர்வாகிகள் வேங்கை வெங்கடேஷ், வழக்கறிஞர் ஜாகிர் உசேன், வழக்கறிஞர் அலிஃப் மீரான், மாயா, இனியன், அன்பழகன், அவதார் ஷாஜகான், சித்திக், காஜா மைதீன், கேபிள் குமரேசன், சடாமுனி, ஷெட்டி, நச்சினார் இனியன், எஸ்.எஸ்.முத்து, சார்லஸ் முத்து ராஜ், மகாராஜன், தளபதி ஆறுமுகம், செந்தில்குமார், வின்சென்ட் வினோத், கிருஷ்ணகுமார், சிவ குமார், மாணவரணி வினோத், பெரியார், நெல்லையப்பன், அந்தோணி ராஜ், தலைமை கழக பேச்சாளர்கள் சுத.மூர்த்தி, நெல்லை முத்தையா, ராவணன், மில் குமார், பத்மா, சௌந்திரம்,மேரி, பிந்து, ஆனி ரேக்லண்ட், கிருஷ்ணவேணி, சித்ரா, சுப்பு லட்சுமி, கவிதா, சங்கர் கணேஷ், சங்கர், வெங்கடேஷ் உள்பட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

இந்தக் கூட்டத்தில் மாநகரத்திற்கு உட்பட்ட தச்சநல்லூர், நெல்லை பேட்டை, மேலப்பாளையம், பாளையங்கோட்டை ஆகிய 4 பகுதிகளில் உள்ள 55 வார்டுகளில் இருந்து 1250 நபர்களும்,சார்பு அணிகளின் சார்பில் 750 நபர்களும் ஆக மொத்தம் 2000 பேர்கள் கலந்து கொள்வது என முடிவு செய்யப்பட்டது.



சிங்கப்பூரில் மூன்றாம் நாள் பயணத்தைத் தொடங்கும் முன் பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழியுடன் மாணவ, மாணவிகள் குழு புகைப்படம் எடுத்துக் கொண்டதோடு, கல்வி, தொழிற்நுட்பம் சார்ந்த கலந்துரையாடலை மேற்கொண்டனர்.